ஓம் சாயி ராம்

# சாயி மார்க்கம்

இலங்கை ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின்
காலாண்டு இதழ்

சாயி நிலையம் Sathya Sai Centre
வாராந்த பஜனை
வியாழன் மாலை 4.00

# சாயி மார்க்கம்

## SAI MARGAM ( *Tamil* )


| | | |
|---|---|---|
| மலர் 6<br>இதழ் 17 | ஒரே ஒரு மதம்<br>அது அன்பு எனும் மதம் | சாயி மனித மேம்பாடு ஆண்டு<br>ஒக்ரோபர் – டிசம்பர் 1999 |


பொருளடக்கம்


சுவாமியின் கைகளிலே சாயி மார்க்கம் 1

எமது மனம் நிறைய 2

ஸ்ரீ சிவஞானம் ஐயா பின்நோக்கிப் பார்க்கிறார். கண்காணிக்கும் கண்கள் 3

பிரசாந்தியில் நமது பிரதிநிதிகள் 7

இளைஞர் மகாநாடு இன்னும் ஒரு பார்வை சுவாமியைக் கண்டோம் 11

சுவாமியின் உரைகளில் இருந்து 14

பிரசாந்தியில் மாதர் தினம் 17

சாயி இளைஞர் சேவையில் இணைந்து கடமையைச் செய்ய வாருங்கள் 21

பகவான் சுவாமியுடன் மருத்துவம் பற்றி உரையாடல் 24

செய்திகள் 28



இலங்கையில் தனிப்பிரதி :- ரூபா 25/-

வருடசந்தா ( 4 பிரதிகள் தபால் செலவுஉட்பட) ரூபா 100 /-

வெளிநாடு வருடசந்தா US $10

காசோலை, பணக்கட்டளைகளை ஆசிரியருக்கு அனுப்பி வைக்கவும்.

ஆசிரியர் :
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்
( நந்தி )

துணை ஆசிரியர்கள் :
ஸ்ரீ S. R. சரவணபவன்
ஸ்ரீ V. K. சபாரத்தினம்

நிருவாக அலுவலகம்;
' சத்தியம் '
681/2 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சுவாமியின் கைகளிலே சாயி மார்க்கம்

மிகவும் மகிழ்ச்சியான செய்தி தருகின்றோம். சென்ற இதழில் தலையங்கமாக, 'எங்கள் சுவாமி எங்களிடம் வரவேண்டும். என்று எழுதினோம். அந்த இதழை சுவாமியின் பாத கமலங்களில் வைக்க இருந்தோம். ஆனால் பகவானின் கருணை, நாங்கள் ஒரு பக்தர் மூலம் அனுப்பிய அந்த இதழை, பகவான் தனது திருக்கைகளாலேயே வாங்கிவிட்டார்! அந்த அருளும் ஆசீர்வாதம் உங்கள் அனைவரையும் சேரும் பகவான் எமது தாய் நாட்டிற்கு வரவேண்டும். இங்கே சமாதானமும் அமைதியும் நிலவ வேண்டும் எனத் தொடர்ந்து தனியாகவும் கூட்டாகவும் பிரார்த்திப்போமாக!

இந்த இளைஞர் இதழ்

1999 இன் கடைசி இதழாக இந்த சாயி மார்க்கம் வருகிறது. இது ஒரு நூற்றாண்டின் கடைசி இதழ் கூட, இனி. 2000 ஆண்டு. சாயி இளைஞர்கள், சாயி நிறுவன நிர்வாகத்திலும், தொண்டிலும், கல்வியிலும், ஆத்மிக வளர்ச்சியிலும் அதிக பங்குகொள்ள வேண்டிய சகாப்தம் தொடங்குகிறது. அந்த எதிர்பார்ப்புடன் இந்த இதழ் இளைஞரின் கருத்துக்களுடன் வருகின்றது. எமது இளைஞரின் பிரதிநிதிகள் புட்டபர்த்தியில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டிற்குப் போய் வந்தார்கள். அவர்களின் அனுபவங்களை இந்த இதழ் தாங்குகின்றது. அவற்றைப் படித்து. மகிழ்ந்து, பயனடைய அனைவரையும் வேண்டுகிறோம்.

ஜெய் சாயிராம்.

> ''16 வயது தொடக்கம் 35 வயது வரையிலான காலப்பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது இக்காலப்பகுதியில் வாழ்க்கைக்கு இனிமை சேகரிக்சப் டுகிறது. தறன்கள் மனோபாவங்கள் ஆகியவை ஒருவரால் சேகரிக்கப்பட்ட பின்னர் அடை புடமிடப்படுகின்றன. சுயநல மற்ற சேவை இந்தப் பருவத்திலே மேற்கொள்ளப்படுமாயின் வாழ்க்கை முழுநிறைவடையும்.''
>
> – பாபா –

பகவானின் அருள்மொழிகள் தொடர்ச்சி

# எமது மனம் நிறைய...

8. A) *Love All Serve All*

எல்லோரையும் நேசி,
எல்லோருக்கும் சேவை செய்.

B) *Help Ever Hurt Never*

எப்போதும் உதவிசெய்
ஒருபோதும் தீங்கு செய்யாதே

C) *Why Fear When I am Here*

நான் இங்கே இருக்கும்போது பயம் ஏன்

9. *Forget Two Things in Life - Harm done to you by others; Good done by you to others.*

வாழ்வில் இரண்டு விடயங்களை மற — உனக்கு மற்றவர்கள் செய்த தீமை நீ மற்றவர்களுக்குச் செய்த நன்மை

10. *Practise the five Basic human values-Truth, Righteousness, Peace, Love, and Non - Violence*

உனது வாழ்வில் அடிப்படையான ஐந்து மனித மேம்பாடு களைக் கடைப்பிடி. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை (அன்பு), அகிம்சை.

(அருள்மொழிகள் தொடரும்)

ஓம் ஸ்ரீ சாயிராம்

## ஸ்ரீ சிவஞானம் ஐயா பின்நோக்கிப் பார்க்கிறார்

# கண்காணிக்கும் கண்கள்

என்னுடைய கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கிறேன். 1966 ஆம் ஆண்டு பிரசாந்தி நிலையத்தில் பகவான் பாபாவின் முதலாவது தரிசனம் பெற்ற காலத்திற்கு முன்பு, பரபரப்பான இளமைக் காலத்தின் பரவசங்களுக்கிடையேயும் சாதாரணங்களுக்கு அப்பாற் பட்ட ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டு தான் இருந்திருக்கிறேன். எப்பொழுதாவது, எங்காவது ஒரு பிரபல சமயச் சொற்பொழிவாளர் பேசுவாரயின் அதைக் கேட்பவர்கள் மத்தியில் நானும் இருப்பதை உறுதி செய்து கொள்வேன்.

ஏதோ ஒன்றைத் தேடியதாகவும் எனது புத்தகப் படிப்பு இருந்தது ஆனால் விபரிக்க முடியாத, விளங்கிக் கொள்ளமுடியாத ஒரு வெளி இருந்து கொண்டே வந்தது

**தேடியது கிடைத்தது:**

யுக அவதாரமான பகவான் பாபா 1926 ஆம் ஆண்டு எங்களை உய்விக்க இந்தப் பூவுலகத்திற்கு வந்திருந்தார். 40 ஆண்டுகள் அவரைப் பற்றி அறியாது அறியாமையில் கழித்து விட்டேன். இறைவனின் ஏற்பாட்டின் படி நான்தேடிக் கொண்டிருந்த சற்குரு எனக்குக் காண்பிக்கப் பட்டார். தென் இந்தியாவின் ஏகாந்தமான காட்டுப்புறத்தில் சமயங்களின் உண்மை பிரத்தியட்சமானது. தெய்வீகம் என்பதன் கரு சாதாரணமான ஒருவனுக்கும் புரிந்து கொள்ளக்கூடிய மாதிரி ஒரு உருக்கொண்டது. அடுத்த ஆண்டும் அதற்குப் பின்பும் பல தடவைகள் நான் புட்டபர்த்திக்குக் கவரப்பட்டேன். எனது வாழ்க்கை பகவானால் ஆக்கிரமிக்கப்பட்டது. அவர் எப்பொழுதும் என்னைச் சுற்றி கண்காணிக்கும் இரு கண்களாக இருப்பதை உணர ஆரம்பித்தேன். விரக்தி, ஏமாற்றம், மனச்சோர்வு என்ற வார்த்தைகள் தங்கள் வலிமையை இழக்க ஆரம்பித்தன. வாழ்க்கைச் சுமைகளை யாரோ ஒருவர் பக்கத்தில் இருந்து குறைக்கவும், பகிர்ந்துகொள்ளவும் எப்பொழுதும் தயாராக இருப்பதை உணர ஆரம்பித்தேன்.

**கோப்பி கடையிலே:**

'கண்காணிக்கும் கண்கள்' நடாத்திய முதலாவது நாடகத்தை உங்களுடன் மீட்டுப் பார்க்க விரும்புகிறேன், முதன் முறையாக பிரசாந்தி நிலையத்திற்கு எனது மனைவியும், நானும் 1972 இல் போயிருந்தோம்.

வெளிநாட்டு பக்தர்களுக்கு இன்று கிடைக்கும் வசதிகள் அன்று இருக்க வில்லை அன்று விடுதி (*Lodge*) என்று கணிக்கப்பட்ட ஒரு அறையில் பிரசாந்தி நிலையத்துக்கு வெளியில் இருக்கவேண்டி இருந்தது. பிரசாந்தி நிலையத்திலுள்ள விநாயகர் கோயிலுக்குச் செல்கின்ற பாதையில் இது அமைந்துள்ளது. கிழக்கு வாசலுக்கு வெளியே சில கோப்பிக் கடைகள் இருந்தன. நானும் எனது மனைவியும் கோப்பி அருந்துவதற்காக தினமும் காலை 6 - 30 மணிக்கு அதில் ஒரு குறிப்பிட்ட கடைக்குச்செல்லும் தின வாடிக்கையாளர்களாக இருந்தோம். அநேகமாக நாங்கள் தான் அந்தக் கடைக்குள் வரும் முதலாவது ஆட்கள். எங்களைக் கண்டதும் இரண்டு ஸ்பெசல் கோப்பி என்று காசுப்பெட்டிக்கு அருகில் நிற்பவர் சொல்வார். ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட ஒரே மேசையிலிருந்தே காப்பி அருந்துவோம்.

ஒரு நாள் காலையில் (கோப்பிக்காகப் போயிருந்த பின்பு) எந்தவித காரணமும் இல்லாமல் நான் எனது மனைவிக்குச் சொன்னேன் 'ஒரு மாற்றத்துக்காகப் பக்கத்துக் கடைக்குப் போவோம்' என்று; எமது வழமையான கடைக்காரனிடம் எமக்குக் கோப்பிவேண்டாம் என்று சொல்லிவிட்டு ஒரே சுவருக்கு அப்பால் இருந்த அடுத்தகடைக்குச் சென்றோம்.

நாங்கள் அடுத்த கடைக்குப் போய் கோப்பி கேட்டுக்கொண்டு இருந்த அதே நேரம் பெருஞ்சத்தம் ஒன்று கேட்டது எமது வழமையான கோப்பிக் கடையின் சீமெந்துக் கூரை இடிந்து விழுந்து கீழே உள்ள எல்லாவற்றையும் நாங்கள் சிறிதுநேரத்திற்கு முன்பு அங்கே இருந்த அந்த மேசையையும் சேர்ந்து நொருக்கிவிட்டது. இரண்டு கடைகளையும் பிரித்த கல்லுச் சுவர் கூடநாமிருந்த கடைக்குள் கற்களைச் சிதற வைத்துக் கொண்டு நொருங்கி விட்டது. ஒருவருக்கும் ஒரு காயமும் ஏற்படவில்லை. எங்கள் வழமையான ஆசனத்தில் நாம் இருந்திருந்தால் இறந்திருப்போம். எங்கள் இருவரையும் பகவான் சரியான நேரத்தில் கட்டளையிட்டு அகலும்படி செய்து விட்டார் இடிந்துபோன கடையின் சொந்தக்காரர் வெளியே வந்து நாங்கள் இறப்பிலிருந்து தப்பியதைப் பார்தது ஆச்சரியப் பட்டார்

சாயிராம், சாயிராம்

1975 ம் ஆண்டு வவுனியாவில் அரசாங்க அதிபராக இருந்தேன். ஒரு உத்தியோக காரணமாக எனது காரியாலயத்திலிருந்து 50 கி. மீ. தூரத்திலுள்ள செட்டிகுளம் A.G.A காரியாலயத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். பின் ஆசனத்தில் பிரயாண உதவி கேட்ட ஒரு புகையிரத உத்தியோகத்தர் இருந்தார். முன்னால் எனது சுருக்கெழுத்தாளர் இருந்தார். அந்தப் புத்தம் புதிய காரை சில வாரங்களுக்கு முன்னர்

தான் அரசாங்கம் எனக்குத் தந்தது அதை ஓட்டிய சாரதி ஒரு பௌத்தர். அவர் எனது உத்தியோக காரையோ, ஜீப்பையோ ஓட்டும்பொழுது பாதையில் ஒரு சிறு பிராணிக்கும் கூட காயம் வராது பாதுகாப்பதில் மிகவும் கவனமாக இருப்பார் 40 மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்த எமது காரிலிருந்து ஒரு நாயைக் காப்பாற்றுவதற்காக காரைச் சடுதியாகத் திருப்பினார். ஆனால் அது பின்னால் வேகமாகவந்து கொண்டிருந்த ஒரு லாரியை இடித்து விட்டது. தெருவின் ஓரமாக இருந்த பாலைமரத்தில், சாரதியின் கட்டுப் பாட்டை இழந்த கார், நேருக்கு நேராக மோதப்போவதை என்னால் உணர முடிந்தது கண்களை மூடி "சாயிராம்" என்றேன். கண்ணாடி யன்னல்கள் தூள்தூளாக உடைந்து மழையாக எங்கள்மீது விழுந்தது. சாரதியின் கையிலுள்ள செலுத்தும் சக்கரம் வளைந்து அவரது நெஞ்சை இறுக்கியது காரின் முகப்பு முற்று முழுதாக நொருங்கி இருந்தது கிராமத்தவர்கள் கூடி எங்களை வெளியே எடுத்தார்கள் இந்த விபத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட உதவி அரசாங்க அதிபர் உடனேயே அந்த இடத்திற்கு வந்தார் நாங்கள் எல்லோரும் உடனே சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்பு வெளியே வந்தோம் எனது வலது முழங்காலில் எற்பட்ட காயத்தோடு தப்பித்த நான் அதையும அக்கியூ பங்சர் சிகிச்சையினால் பின்பு சரி செய்து கொண்டேன். விபத்து நடந்த இடத்தைப் பார்த்த எவருமே காரில் இருந்த எல்லாரும் இறந்திருப்பார்கள் என்று தான் எண்ணியிருப்பார்கள். கார் முற்று முழுதான சேதம் என்று கழிக்கப்பட்டது. "தேவையான பொழுது என்னை அழையுங்கள் நான் வருவேன்" சுவாமியின் அருள் எங்களைச் சாவின் பிடியில் இருந்து காப்பாற்றியது.

**சிகரட் - சுருட்டு - சுங்கான் :**

நான் பெரிய அளவில் சிகரெட் புகைப் பிடித்தேன். அப்போதைக்கப் போது அரைமனதுடன் சிகரெட்டை விட்டுவிட வேண்டுமென்ற தீர்மான மும் இருந்தது. நண்பர்கள் சுருட்டுப் பிடிக்கும் படி ஆலோசனை சொன்ன படியால் சுருட்டையும் பிடிக்க ஆரம் பித்தேன். எனக்கு சிகரெட்டை விடுவது சுலபமாக இருந்திருக்கலாம். ஆனால் சுருட்டை ஆரம்பித்தேன். அத்தோடு சிகரெட்டும் தேவையாய் இருந்தது.

பின்பு சில நண்பர்கள் சொன்னார்கள். "சுருட்டுப் பிடிப்பது ஒரு அசிங்கமான பழக்கம் அதோடு அது அயலவர்களுக்கும் தீமை விளைவிப்பது, சுங்கான் பிடிப்பதுதான் சுருட்டிலிருந்து மீள ஒரே வழி" என்றார்கள். கடைசியாக 1967ல் பிரசாந்தி நிலையம் போனபோது சிகரட், சுருட்டு, சுங்கான் மூன்றும் பாவித்துக்கொண்டு போனேன். எனது

மூட்டை முடிச்சுகளில் சிகரட், சுருட்டு இரண்டும் போதிய அளவு இருப்பதை உறுதி செய்து கொள் வேன் நான் புகை பிடிப்பதாயின் வெளித்தெருவிற்கு வந்துதான் புகைப் பேன் எனது மனைவி பிள்ளைக ளுடன் 'பகவான் எனக்குத் தந்த இன்றர்வியூவில் இதைப்பற்றி ஒன்றுமே நான் சொல்லவில்லை. அப்போது சுவரில் சாய்ந்து கொண் டிருந்த என்னைக் கூப்பிட்டு தனது கதிரைக்கு அருகில் இருக்குமாறு செய் தார். பகவான் தனது ''விஸிட்டிங் காட்டை'' உண்டாக்கி எனது பொக் கட்டினுள் போட்டார் ஒரு சிறு போத்தலில் மருந்தை உண்டாக்கி எனது ஒரு மகளிடம் கொடுத்தார். (இன்றும் அந்தப் போத்தலைப் பாது காத்து வருகிறேன்) இவற்றை எல் லாம் செய்யும் பொழுது கூடாத பழக் கங்களைப் பற்றி ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அந்தத் திடீர் அடியை இன்னொரு சந்தர்ப்பத்திற் காக ஒதுக்கி வைத்திருந்தார்.

**புதிய மனிதன்:**

நான் இலங்கைக்குத் திரும்பி வந்து ஒருநாள் சத்திய சாயி பேசு கிறார் (*Sathya Sai Spealks*) என்ற நூல்வரிசையில் ஏதோ ஒருபாகத்தில், ஏதேச்சையாக ஒரு பக்கத்தை எடுத் துப் படித்தேன். எனது கவனத்தை ஈர்ந்த முதல்வரிகள் இப்படி இருந்தது

**''புகை பிடிப்பவர்கள் எனது அருகில் வருவதை நான் விரும்பு வதில்லை''**

சொல்லப்பட்ட செய்தி பலமாக) தெளிவாக இருந்தது. புகைபிடிப் பதை விட்டு விட வேண்டு மென்ற தீர்மானம் இலகுவானது. ஆனால் அதைக கடைப் பிடிக்கும் மனோ வலிமை எங்கே? அந்தக் கணத்தி லிருந்து சிகரெட், சுருட்டு, சுங்கான் மூன்றையும் விட்டு விடத் தீர்மானித் திருக்கிறேன் என்று என் மனைவி யிடம் சொன்னேன். சிறு சிந்தனை யின் பின் மீன், இறைச்சி சாப்பிடுவ தையும் விட்டுவிடுகிறேன் என்று சொன் னேன் பின்பு, சில விருந்து சமயங் களில் மது குடிக்கும் மூன்றாவது பழக்கம் இருந்ததே ... அதுவும் போனது. எல்லாமாக மூன்று தீர் மானங்கள். ஒரே தீர்மானத்தி லேயே மூன்று பழக்கங்களையும் விடுவதென்றே என் முடிவு, என் நண்பர்களிலும் பார்க்க எனக்கே வியப்பாக இருந்தது. ஆத்ம உணர்வும் உறுதியும் ஐயத்துக் கிடமில்லாமல் பகவான் தனது அளப்பெருங் கருணையினால் தந்தார். அந்தத் தீர் மானம் இன்றும் நின்று நிலைக்கிறது.

சுவாமி செய்யும் மிகப்பெரிய அற் புதம் ஒரு மனிதனைப் புதிய மனித னாக்குதல் (*Transformation*) ஆகும்.

மூல நூல்: *Sathya Sai - The Eternal Charioteer-Sri Prasanthi Socitey, Hyderbad, India.*

சுருக்கமும் தமிழாக்கமும்:
**ஸ்ரீ க. சிவபாதவிருதயர்**

# பிரசாந்தியில் நமது இளைஞர் பிரதிநிதிகள்

தெய்வீகத்தை மனிதவுருவில் தரிசிப்பது ஒரு பெரும் பாக்கியம். ஆம், இரண்டாவது ஸ்ரீ சத்ய சாயி உலக இளைஞர் மாநாட்டிற்கு யாழ்ப் பாணத்திலிருந்து சென்ற 3 பிரதிநிதி களில் நானும் ஒருவன் ஒன்பது நாட்கள் அந்த பூலோக வைகுந்த மாகிய புட்டபர்த்தியில் தங்கியிருந்து சுவாமியைத் தரிசிக்கும் ஓர் அரிய வாய்ப்பு, சுவாமியின் பெருங்கருணை யினால் எனக்குக் கிட்டியது.

**மாநாட்டின் நோக்கம்**

நவம்பர் மாதம் 18, 20, 21ம் திகதி களில் மூன்றுநாட்களாக நடைபெற்ற இம் மாநாட்டின் நோக்கம், பிறக் கப் போகின்ற புத்தாயிரமாண்டில் இளைஞர்களிடையே தெய்வீக விழிப் புணர்ச்சி ஏற்படுவதை நிச்சயப்படுத் தலும் அதன்மூலம் நல்லதொரு வருங் கால சமுதாயம் உருவாவதற்கு வழி கோலுதலும் ஆகும்.

இம்மாநாட்டில் கலந்துகொள்ள வென 63 நாடுகளில் இருந்து ஏறத் தாழ 860 பிரதி நிதிகளும், இந்தி யாவில் இருந்து 7000 பிரதிநிதிகளும் பர்த்திக்கு வந்திருந்தனர்.

**வெளிநாட்டு பிரதிநிதிகள்:**

17ம் திகதி மாலை வெளி நாட்டுப் பிரதிநிதிகளிற்கு மாநாட் டிற்கு முன்னோடியாக ஒரு ஒன்று கூடல் இடம்பெற்றது. இதில் 1997ம் ஆண்டு நடைபெற்ற 1வது ஸ்ரீ சத்ய ஸாயி உலக இளைஞர் மாநாட்டின் பின்னர் கடந்த இரண்டு வருடங்க ளாக ஸாயி இளைஞர் அணியில் ஏற் பட்டுள்ள வளர்ச்சியும், அவர்களின் செயற்பாடுகளும் என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. இதில் ஒவ்வொரு நாட்டினதும், ஒரு பிரதிநிதி தத்தமது நாட்டில் இளைஞர் அணியினரது வளர்ச்சி யையும், அவர்கள் கடந்த 2 வருடங் களாக செய்துள்ள பிரதான சேவைத் திட்டங்கள் பற்றியும் கூறினர். இதில் மலேசியா நாட்டு இளைஞர்கள் சுவாமி மேல் மாறாத நம்பிக்கையு டனும், அர்ப்பண சிந்தனையுடனும் தமது நாட்டில் செய்துள்ள சேவை களின்மூலம் சாயி இளைஞர் அல் லாத இளைஞர்களையும் கவர்ந்து தமது சேவைத்திட்டங்களிலே ஈடுபட வைக்க முடிந்திருந்தமை உண்மை யிலே ஏனைய நாட்டு இளைஞர் களுக்கு ஒரு முன்மாதிரி என்று கூறலாம்.

18ம் திகதி காலை வெளிநாட்டு இளைஞர் பிரதிநிதிகளுக்கு 'ஸ்ரீ சத்ய சாயி சேவா' நிறுவனத்தின் அமைப் புப்பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 15 மத்திய

இணைப்பாளர்களும் ஐந்தைந்து நிமிடங்கள் இளைஞர்களுக்கு உரை யாற்றினர்.

**சுவாமியின் முன்னிலையில்:**

மதியம் ஒரு மணிக்கு 'ஸாயிகுல் வந்த்' மண்டபத்தில் சுவாமியின் அரியாசனத்திற்கு முன்பாக வெளி நாட்டுப் பிரதிநிதிகளாகிய எமக்கு அமர இடம் தரப்பட்டது. 2-30 மணிக்கு சுவாமிமண் டபத்தினுள்ளே நுழைந்தவேளை இளைஞர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு குரலில் 'நல்வரவு எங்கள் தாய்க்கு'' என்ற ஆங்கிலப் பாடலைப் பாடினோம்.

பின்னர் சுவாமி விளக்கேற்றி மகாநாட்டை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். அதை அடுத்து அணிவகுப்பு நடைபெற்றது. ஒவ்வொரு நாட்டினதும் பிரதிநிதி ஒருவர் கொடியேந்தி ஒரு புறத்தால் வர இன்னொருபுறத்தால் நாட்டினது பெயர்ப் பலகையை ஏந்தி அந்நாட்டின் பெண் பிரதிகளும் வந்தனர். கொடிகள் ஸ்வாமியின் பின்னால் நாட்டி வைக்கப்பட்டன.

இதையடுத்து இந்தியப் பிரதிநிதி கடந்த இரு வருடங்களாக இந்தியாவில் இளைஞர்கள் செய்துள்ள சேவைப் பணிகளைப் பட்டியலிட்டுக் கூறினார். அதைத்தொடர்ந்து வெளி நாட்டுப் இளைஞர்களின் சார்பில் ஒரு பிரதிநிதி வெளிநாடுகளில் ஸாயி இளைஞர்கள் செய்துள்ள முக்கிய சேவைகளைப் பட்டியலிட்டுக் கூறினார். அவர் மலேசிய நாட்டு இளைஞர் அணி இணைப்பாளர். அவரே மலேசியா இளைஞர்கள் செய்திருந்த சேவைகளை நெறிப்படுத்தியிருந்தார். அவர் உரையாற்றி அமர்ந்ததும் சுவாமி எழுந்து சென்று அவருக்கு பாதநமஸ்காரம் கொடுத்ததோடு மட்டுமல்லாது மோதிரம் ஒன்று சிருஷ்டித்து அவரின் விரலில் அணிவித்தார். சேவையினால் எவ்வளவு தூரம் சுவாமி மகிழ்கிறார் என்பதை அங்கிருந்த இளைஞர்களுக்கு உணர்த்தவே அந்த அற்புதத்தை சுவாமி நிகழ்த்தியிருக்க வேண்டும்.

அடுத்து சுவாமி தனது தெய்வீகப் பேருரையை நிகழ்த்தினார். 45 நிமிட நேரம் உரை நிகழ்த்திய பின் இளைஞர்களுக்கு பழங்கள் சுவாமியின் ஆசீர்வாதத்துடன் வழங்கப்பட்டது.

**தலைமைத்துவ பட்டறை:**

அன்று மாலை 7 மணிக்கு வெளி நாட்டுப் பிரதிநிதிகளுக்கு தலைமைத்துவம் என்ற தலைப்பில் பயிற்சி பட்டறை நடைபெற்றது. ஆரம்பத்தில், 10 வெவ்வேறு நாட்டைச் சேர்ந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 'தலைமைத்துவம்' பற்றி தாங்கள் புரிந்து கொண்டிருப்பதைக் கூறினர். அதன் பின்னர் பிரதிநிதிகள் அனைவரும் ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். தலைமைத்துவத்தின்போது ஏற்படக்

கூடிய வெவ்வேறு பிரச்சனைகள் ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொன்று வழங்கப்பட்டு, தீர்வு காணுமாறு கூறப்பட்டது. இளைஞர்கள் சுவாமியின் அருளுரைகளில் இருந்து பெறப்பட்ட கருத்துக்களை வைத்தே தீர்வு கண்டனர்.

**மனித மேம்பாட்டுக் கல்வி:**

20 - 10 - 1999 2ம் நாள் நிகழ்வு பூரணசந்திர மண்டபத்தில் அனைத்து இளைஞர்களையும் ஒன்று கூட்டி நடைபெற்றது இதில் முதலாவதாக அனைத்திந்திய சாயி நிறுவனத்தின் தலைவர் ஸ்ரீ ஸ்ரீனிவாசன் அவர்கள் இளைஞர்களுக்கு பகவான் கூறிய கருத்துக்கள் சிலவற்றைக் கூறினார். இதையடுத்து சத்ய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியின் சர்வதேச இணைப்பாளர், டாக்டர் ஆட்டோங் ஜூம் சாய் அவர்கள் 21ம் நூற்றாண்டில் இளைஞர்கள் எதிர் கொள்ள வேண்டிய முக்கிய சவால் அவர்கள் தமது தெய்வீக நிலையை உணர்ந்து கொள்ளுதலே என்று ஆரம்பித்து, ஒரு உன்னதமான உரையொன்றை நிகழ்த்தினார். இந்த 1½ மணிநேர உரையில் அவர் சத்ய சாயியின் மனித மேம்பாடு பற்றி மிகவும் எளிதாக விளங்கக்கூடிய முறையில் கூறினார்.

**பயிற்சிப் பட்டறை:**

அன்று மாலை 2 - 30 மணிக்கு மகாநாட்டு மண்டபத்தில் வெளிநாட்டு இளைஞர்களுக்கு ஒரு பயிற்சி பட்டறை ஒன்று நடைபெற்றது. இதில் ஆரம்பத்தில் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள முக்கிய சமூகப் பிரச்சனைகள் பட்டியலிடப்பட்டன. பின்னர் இளைஞர்களை ஆறு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவையும் பட்டியலிடப்பட்ட பிரச்சனைகள் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுத்து அதை அந்நாட்டில் இயன்றவரை குறைப்பதற்கு இளைஞர்களால் செயல்படுத்தக்கூடிய செயற்திட்டம் ஒன்றை உருவாக்கும்படி கேட்கப்பட்டது. உருவாக்கப்பட்ட செயற்திட்டங்கள் ஆறும் பின்னர் எல்லோருக்கும் வாசித்துக் காட்டப்பட்டன. இப்பட்டறையின்மூலம் எவ்வாறு இளைஞர்களால் செயல் படுத்தக் கூடிய செயற்திட்டம் ஒன்றை உருவாக்கலாம் என்று எங்களுக்கு அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

**நாடகம்:**

அன்று காலை 6 - 30 மணிக்கு 'பூரணசந்திர மண்டபத்தில்' ஒரு பிரமாண்டமான நாடகம் ஒன்று அரங்கேறியது முழுக்க முழுக்க இளைஞர்களால் தயாரிக்கப்பட்டு நடிக்கப்பட்ட நாடகம் ஏறத்தாள 220 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இதில் பங்கேற்று 10 நாள் பயிற்சியுடன் அரங்கேற்றப்பட்டது. நாடகத்தின் கருப்பொருள்: மனித மேம்பாடுகளில் நாட்டமில்லாத இளைஞன் ஒருவனை மனித மேம்பாடுகளை கைக்கொள்ள வேண்டும். என்று வற்புறுத்துகின்ற

வகையில் அமைந்திருந்தது. இந் நாடகம் முடிவடைந்ததும் சுவாமி எழுந்து மேடையேறிச் சென்று அந் நாடகத்தில் பங்கேற்ற அனைத்து இளைஞர்களுடனும் படம் எடுத்துக் கொண்டதுடன் அவர்களை ஆசீர் வதித்தார்.

செயற் திட்டம்:

21ம் திகதி காலை மீண்டும் வெளி நாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஒரு பட் டறை நடைபெற்றது. இதில் பிரதி நிதிகள் நாடுகள் வாரியாக ஒன்றுகூடி பர்த்தியில் இருந்து நாடு திரும்பியதும் செயல்படுத்தக்கூடிய செயற்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்படி கேட்கப் பட்டனர். அவ்வாறே இலங்கைப் பிரதிநிதிகள் ஆகிய நாம் 5 வயதிற்குக் குறைந்த குறையூட்டமுடைய குழந்தைகளுக்கு, நிறையூட்டம் கொடுக்கும் செயற்திட்டம் ஒன்றை தயாரித்தோம்.

நிறைவு:

மதியம் 1 மணிக்கு மகாநாட்டு நிறைவு நிகழ்வுகளுக்காக ஸாயிகுல் வந்த் மண்டபத்தில் கூடினோம். வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு சுவா மிக்கு முன்பாக இடம் ஒதுக்கப்பட்டி ருந்தது அவ்விடத்தில் அமர்ந்தோம்: அன்று சுவாமி தரிசனத்திற்கு வரும் போது இளைஞர்களின் மத்தியில் இளைஞனாக வந்தார். பின்னர் தனது அரியாசனத்தில் அமர்ந்தார் அன்றைய நிகழ்வில் திரு இந்து லால்ஷா. திரு. ஆட்டோங் ஜூம்சாய் ஆகியோர் உரை நிகழ்த்தினர்

இதையடுத்து சுவாமி தனது தெய் வீகப் பேருரையை நிகழ்த்தினார். சுவாமி தனது அருளுரையில முடிவில் தனது இருகைகளையும் உயர்த்தி, இளைஞர்களை ஆசீர்வாத மழையில் நனைய வைத்தார். இந்த ஆசீர்வா தத்தின்போது சுவாமியில் இருந்து வெளிப்பட்ட அலைகள் இளைஞர் களின் இருதயத்தை ஊடறுத்துச் சென்றதை இளைஞர்கள் பலர் உணர்ந்தனர்.

இதன் பின்னர் சுவாமியால் ஆசீர்வதிக்கப்பட்ட இனிப்புப் பண் டங்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டு மாநாடு இனிதே நிறைவேறியது.

ஜெய் சாயிராம்

டாக்டர். சி. சிவகோணேசன்
நல்லூர்

'' நல்ல பண்புகள் ஒருவருடத்து இல்லாதவிடத்து அனைத்துப் பட்டங்களும் புலமைகளும், பாண்டித்தியங்களும் பெறுமதியற்றவை யாகும். அருளை வளருங்கள்''
— பாபா

## இளைஞர் மகாநாடு; இன்னும் ஒரு பார்வை

# சுவாமியைக் கண்டோம்

**மகாநாட்டின் நோக்கம்:**

இம்மகாநாட்டின் முக்கிய நோக்கம் என்ன? தலைமைத்துவம், தலைவர்களை உருவாக்கல். அடுத்த புத்தாயிரம் ஆண்டு ஆரம்பமாகி இருபது ஆண்டுகளில் பகவானின் திருவுருவின் அவதாரப்பணி முடிவடையப் போகின்றது. அதன் பின்னர் உலக சத்ய சாயி அமைப்பு என்னும் ஓர் பெரிய நிர்வாகத்தை இவ் இளைஞர்கள்தான் பொறுப்பேற்கவேண்டும் அதற்கு நம்மை (இளைஞர்களை) தயாராக்க வேண்டாமா?

**74 வயதில் ஓர் இளைஞர்:**

மகாநாட்டிற்குள் தெய்வம் எழுந்தருளும் அவ்வேளை 18ம் திகதி மாலை மூன்று மணிக்கு உலக இளைஞர்கள் பிரசாந்தி நிலைய முன்றலில் "சாயி குல்வந்த் மண்டபத்தில்" அணிவகுத்தமர்ந்திருக்க இளைஞர்களின் நடுவே 74 வயது இளைஞர் (பகவான்) நுழையும்போது

"நல்வரவு அன்புள்ள அன்னையே
நல்வரவு அன்புள்ள சாயி
நல்வரவு அன்புள்ள தந்தையே
நல்வரவு அன்புள்ள சாயி"

என இளைஞர்கள் உற்சாகம் பொங்க சாயி மாதாவைக் கூவி அழைத்தனர். கரவொலி விண்ணை முட்டிற்று. பகவானின் தெய்வத்திரு அம் மாநாடு முழுவதும் உலாவந்தது. பகவான் சிங்காசனத்தில் ஏறி அமரவும் கரவொலி விண்ணை முட்டவும் மாநாடு இனிதே ஆரம்பமாயிற்று. முதல் நிகழ்வாக அணிவகுப்பு நிகழ்ந்தது. ஆண்கள் தத்தமது நாடுகளின் தேசிய கொடிகளை ஏந்திவர பெண்கள் தமது நாட்டின் பெயர்ப் பலகையை ஏந்தி வந்தனர். தேசிய கொடிகள் அனைத்தும் பகவானின் சிங்காசனத்தின் பின் நிறுத்தப்பட்டது. பகவானின் பின் நிலைநிறுத்தப்பட்ட கொடிகளின் தொகையானது இது ஓர் உலக மாநாடு என்பதை நிலைநாட்டிக் காட்டிற்று.

**தெய்வத்தாய் அழுகின்றாள்:**

பகவான் ஒரு குறிப்பிட்ட காலம் யாரோடும் பேசுவதில்லையாம். ஏனென்று சுவாமியிடம் விநாவிய போது அதற்கு சுவாமி "நான் நிறையவே பேசிவிட்டேன். ஆனால் யாரும் எனது சொற்படி நடப்பதில்லை எனது சொற்களுக்கு என்ன பெறுமதி" என்று கூறி பகவான் சில காலம் மௌனமாகவே இருந்தார்.

"தெய்வத்தாய் தன் குழந்தைகளை தண்டிக்கவில்லை. அவற்றின் பொருட்டு அவள் அழுகிறாள்."

**சுவாமி சொன்னவை:**

நண்பர்களே!

இப்படித்தான் மாநாட்டில் இளைஞர்களைப் பார்த்து சுவாமி

அழைத்தார் இம் மாநாட்டில் இளை ஞர்கள் எவ்வாறு வாழ வேண்டு மென்று பகவான் கூறிய கருத்துக் களினின்றும் ஒரு சில வார்த்தை ''எல்லோரும் எனது நண்பர்கள் நீங்கள் ஒவ்வொருவரும் எனது ''*Best Friend*'' ஆகவேண்டும். அதற்கான வழிகளையும் சுவாமி கூறினார். அன்பு. சேவை இதுதான் வழி

பகவான் தனது உரையில் நாம் படிக்கவேண்டிய முறைபற்றிக் குறிப் பிட்டார். கையில் புத்தகத்தை வைத் திருப்போம் ஒரு காது கிரிக்கெட் வர்ணனையைக் கேட்கும் மற்றைய காது அடுத்தவன் என்ன பேசுகிறான் எனக் கேட்கும் அப்படியானால் எப்படி ஞாபகம் வரும்.

நண்பர்கள் பற்றி சுவாமி குறிப் பிடுகையில் ஈருடல் ஓருயிர் அதுதான் நட்பு.

*Money is lost nothing is lost*
*Health is lost something is lost*
*Character is lost everything is lost*

சுவாமியின் இவ் வசனமானது நமது வாழ்வில் எப்படி உணரப்படக்கூடிய தாக உள்ளதென பார்ப்போம். நமது வாழ்வில் நாம் எத்தனை. தடவைகள் அகதிகளாக்கப்பட்டு பணத்தை இழந் திருப்போம். ஆனால் நாம் குறைந்து போகவில்லை. மீண்டும் நாம் பணத் தைப் பெறுகின்றோம். ஆனால் ஒரிடத்தில் நடத்தை தவறினால் அது மீளவும் பெறமுடியாத தொன்று

சுவாமி தனது உரையில் ஒவ் வொரு இளைஞர்களையும் பார்த்து ''நான் உன்னோடு இருக்கிறேன். உனக்குள் இருக்கிறேன் நானும் நீயும் வேறல்ல உன்னையும், என்னையும் வேறுபடுத்தாதே'' என்று உருக்கமாக உரையினை நிகழ்த்தினார்.

**ஆர்ட் ஒங் ஜூம் சாய் இன் உரையிலிருந்து:**

எமக்கு முன் ஒருசவால் உள்ளது. அது என்னவெனில் சமாதானமா கவும், தெய்வீகத்துடனும் வாழ எப்படிக் கற்கப் போகின்றோம் என்ற தொனியில் அவரது உரை அமைந்தது அண்மையில் ஒரு நாட்டில் ஒரு மாண வன் தனது கல்லூரிக்கு துப்பாக்கி கொண்டு சென்றான் அங்கு பலரைக் கொன்று தீர்த்தான் இப்படியான நிகழ்வுகள் ஏன் உலக மேடையில் அரங்கேறுகின்றன? இந் நிகழ்வுகட்கு மனிதனின் ஆழ்மனதில் ஏற்படுத்தப் பட்ட சில பதிவுகள் அல்லது வடுக்கள் காரணமாகின்றன இது இளைஞனின் மனதிற்குள் எவ்வாறு சென்ற டைந்தது. அன்றாடம் நாம் பார்க் கும் தொலைக்காட்சிகளில் உருப் பெறும் கொலையாளி நம் மனதில் உருவெடுக்கின்றான். அவனது செயல்கள் நமது மனதில் சிறியதோர் நெருடலை உண்டுபண்ணும். பின்னர் அது விஸ்வரூபமெடுத்து நம்மை கோர தாண்டவம் ஆட வைக்கும்.

ஆகவே தீயவற்றை பார்க்கா தீர்கள் தீயவற்றை கேட்காதீர்கள் தீயவைகளை எண்ணாதீர்கள். மனித மனதில் ஒரு வடு ஏற்பட்டுவிட்டால் அதை அழிக்க முடியாது. ஆகவே அந் நினைவுகளின்மேல் தெய்வீகத்தை

பரப்பவேண்டும் தெய்வீக நினைவுகளால் மனதில் பதிந்துள்ள வடுக்கள் மறைக்கப்பட முடியும். சூரிய ஒளியானது உலகில் புகும்பொழுது இருள் விலகுகின்றது. இருள் எங்கோ சென்றுவிடுவதில்லை. இருள் உள்ளது. ஆனால் அது ஒளியால் மறைக்கப்படுகின்றது. சூரியஒளி மறைய இருள் மீண்டும் ஆட்சிபெறும். அதேபோல் தெய்வீக உணர்வுகள் மறைந்தால் இருள் மீண்டும் ஆட்சி பெறும்.

இவையெல்லாம் சொல்வதற்கும் கேட்பதற்கும் எளிதானது. ஆனால் இவை நடைமுறைக்கு வருதல் சாத்தியமா? என ஓர் இளைஞன் கேள்வி எழுப்பினார். அதற்கு விடையளித்த மெய்ஞானத்தை ஆராயவல்ல விஞ்ஞானி ஆர்ட் ஒங் ஜும்சாய் கூறுகையில் ''முதலில் என்னால் முடியாது என்ற நினைவை விட்டு விடுங்கள் அந்த நினைவுதான் முன்னேற்றத்தின் பெரும் தடைக்கல். அடுத்த விடயம் ஜோதி தியானம் பண்ணல்வேண்டும். மற்றைய விடயம் சுவாமி எமக்கு பயிற்றுவித்த சோஹம் பயிற்சி செய்யவேண்டும் (இப்பயிற்சி பற்றி சுவாமியின் அருளுரையிலிருந்து அறிக) இவற்றினூடுதான் நாம் நமது அடிமனத்திலிருந்து (*Subconscious mind*) உயர்மனத்திற்கு (*Super Conscious mind*) செல்ல முடியும்

சுவாமியின் மனது எப்பொழுதும் உயர் மனத்திலேயே சஞ்சரிக்கிறது. அதுதான் வார்த்தையிலும், நடத்தையிலும், தெய்வத்துவம் பிரதிபலிக்கிறது

சுவாமி தனது உரையில் குறிப்பிட்ட ஒரு விடயம் ''நமக்கு கோபம் வருகின்றபோது நாம் நம்மையே வினவ வேண்டும். *Am I dog? no, I am god. Am I monkey? no, I am not.* எந்த ஒரு விடயமும் மிகவும் நிதானமாக முதலில் (*Head*) புத்தியில் கிரகிக்கப்பட்டு (*Heart*) மனத்தினால் பகுத்தாராயப்பட்டு (*Hand*) கை செயலாற்ற வேண்டும் இதுதான் (*Human Values*) மனிதமேம்பாடுகளை நாம்வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த சிறந்த வழி. ஆர்ட்ஒங் ஜும்சாய் தனது உரையில் இவ் விடயத்தை பின்வருமாறு கூறினார்: ஒருமுறை சுவாமி என்னிடம் What is EHV? என வினவினார் நானும் இன்னும் பலரும் கூடி ஆராய்ந்து பல் வேறு பதில்களை கூறினோம் ஆனால் சுவாமி ஒவ்வொரு பதிலையும் மறுதலித்து ஈற்றில் பின்வருமாறு கூறினார். *E. H. V is three HV.* அந்த 3'*H*' உம் *Head Heart, Hand.*

சுவாமி கூறும் அன்பு, அந்த அன்பு எல்லோரிடத்திலும் செலுத்தினால் உலகில் மாற்றம் ஏற்படுமா?

சுவாமி சொல்லும் மந்திரங்கள் அவற்றின் சக்திகளை எப்படி பரீட்சித்து பார்க்கமுடியும் இவற்றை பரீட்சிக்க முடியாமல் போனால் விஞ்ஞான உலகம் அவற்றை மறுதலிக்கும் அதற்குபதிலாக ஆர்ட் ஒங் ஜும்சாய் உரையிலிருந்து ஒரு விடயத்தை எடுத்து இங்கே காட்டலாம் ஒரு முறை தாய்லாந்தில் சாயி பாடசாலையில் கல்வி கற்கும் சிறுபிள்ளைகள் காயத்திரி மந்திரத்தை உரக்கக்கூறியபடி சாயி மாதாவின்மேல் அன்பை

பொழிந்த வண்ணம் நெல் நாற்றுக் களை நாட்டினார்கள். அதே நாள் வேறுசிலரும் அதே அளவு நெற்களை நாட்டினார்கள். அன்றிலிருந்து 45ம் நாள் அந் நெற்கன்றுகளின் நிலையை ஒளிப்படங்கள் மூலம் காட்டினார். பிள்ளைகள் நட்ட கன்று பிள்ளை களை விஞ்சி ஓங்கி வளர்ந்து நின்றது. மற்றையவர்களினது கன்றுகள் சொற்ப வளர்ச்சியைக் காட்டிற்று.

சுவாமி கூறியபடி அக்குழந்தைகள் பிரயோகித்த அன்பெனும் பேரலை ஓர் தாவரத்தில் இத்துணை மாற்றத்தை ஏற்படுத்த வல்லது எனின் ஏன் நம் மனங்கள் மாறவில்லை முள்ளும், புதரும், கல்லும் மனித மனங்களில் மண்டிக் கிடக்கின்றதோ?

ஸ்ரீ சிவபாதவிருதையர் சம்பந்தன்
வவுனியா

ஓம் சாயிராம்

இளைஞர் மகாநாட்டில்

# சுவாமியின் உரைகளில் இருந்து...

**இளைஞர்களே, இளைஞிகளே! இவ்வுலகின் வரும் காலப் பிரஜைகளே!**

## 18 - 11 - 99

சமூகத்தில் உள்ள நிம்மதியற்ற தன்மையைக் களையக் கூடியவர்கள் இளைஞர்கள் மட்டுமே. பேராசையே மனிதனது துன்பத்திற்கு காரணம். பேராசைப்படாதீர்கள் ஒரு மாணவனாக உங்களுடைய கடமையை ஊக்கத்துடன் செய்யுங்கள், நன்றாகப் படியுங்கள்- நல்ல 'மார்க்' வாங்குங்கள் பெற்றோரை மதியுங்கள் அவர்களுக்கு சேவை செய்யுங்கள் சமூகத்தினதும், நாட்டினதும் ஷேமம் உங்கள் மனதில் இருக்கட்டும், சமூகத்தில் நல்ல பெயரெடுங்கள்- உங்கள் கல்வியறிவை எண்ணிப் பெருமையடையாதீர்கள், உங்களுடைய கல்வி சமூகத்தினுடைய நல்வாழ்வுக்கு பயன்படவில்லையாயின் அது வீணானது.

## 21 - 11 - 99

**உங்கள் நடத்தை:**

இந்த உலக மக்களின் எதிர்காலம் நல்லதோ, கெட்டதோ உங்கள் நடத்தையிலேயே தங்கியுள்ளது நடத்தை நன்நடத்தையாக இருந்தால் மட்டுமே உங்கள் நாடுகள் பாதுகாப்பானதாக, அமைதியானதாக, முன்னேற்றகரமானதாக இருக்கும். இன்று உலகிற்கு மிகவும் தேவையானது ஆண், பெண் இருபாலரினதும் நன்நடத்தையே அன்றி, செல்வமும், நவீன வசதிகளும் அல்ல. ஒரு நாட்டின் இளைஞர்களினதும், இளைஞிகளினதும் நடத்தை சரியானதாக அமையாவிட்டால் அந்நாடு அழிவடைவது தவிர்க்க முடியாத தொன்றாகிவிடும்.

சத்தியம்:

இன்று இவ்வுலகம் பிரச்சனைகள், குழப்பங்கள், அநீதி, பொய்மை, தர்மமின்மை என்பவற்றில் மூழ்கியுள்ளது. இளைஞர்களாலும், இளைஞிகளாலும் மட்டுமே நலிவடைந்து வரும் மனித மேம்பாடுகளை மீண்டும் நிலை நிறுத்த முடியும். நீங்கள் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தால் மட்டுமே சமூகத்தில் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்பன நிலவும் நீங்கள் நன் நடத்தையுடையவர்களாக இருப்பதற்கு சத்தியததைக் கடைப்பிடித்தல் ஆவசியம்.

சேவை

உங்களிடையே உள்ள வேற்றுமையை மறவுங்கள். வேற்றுமையில் ஒற்றுமையைக் காணுங்கள் நீங்கள் கிராமத்திற்குச் சென்று ஏழைகளுக்கு உதவக்கூடும், கிராம அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளக்கூடும். ஆனால் இவற்றினால் நீங்கள் பெரிய சேவை செய்பவர்கள் என்று அர்த்தம் அல்ல. இதன் மூலம் நீங்கள் உங்கள் கடமையையே செய்கிறீர்கள். ஆகவே உங்கள் வாழ்க்கையை சேவையிலேயே செலவிடுங்கள். பதவிக்கும், ஆசைப்படாதீர்கள். உண்மையில் நல்ல சேவையாளனே நல்ல தலைவன்.

ஆத்மிக சாதனை:

உண்மையான ஆத்மிக சாதனை என்பது சமூகத்தினரோடு கைகோர்த்து, சமூகத்தின் முன்னேற்றத்திற்காக உழைப்பதேயாகும். உங்களுடைய எல்லாச் செயற்பாடுகளும் அன்பினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். எந்தச் செயற்பாடுகளையும் ஆத்மிகக் கண்ணோட்டத்துடன் செய்யுங்கள்,

சத்தியத்தையும், அன்பையும் கடைப்பிடிப்பதை விட சிறந்த ஆத்மீக சாதனை எதுவும் இல்லை.

சுயமுயற்சியும் நம்பிக்கையும்:

மனித வாழ்வில் எதிலாவது வெற்றியடைவதற்கு சுயமுயற்சி மிகவும் அத்தியாவசியமானது. எதையும் எதிரிடையாகச் சிந்திப்பதை விட்டுவிட்டு நேரிடையாகச் சிந்தியுங்கள்.

சுயநம்பிக்கையுடன் இருங்கள். இறைவனிடம் மட்டும் உதவி கோருங்கள். வேறு எவரிடமும் அல்ல. இறைவனின் வேலை பிறருக்கு உதவுதல் மட்டுமே. அவரைச் சிரந்தையுடன் பின்பற்றுங்கள்.

ஒற்றுமை என்ற சக்தி

உங்களிடையே தப்பபிப்பிராயங்கள், பிரச்சனைகள் வர இடம் கொடாதீர்கள். ஒற்றுமையே மேன்மையான சக்தி ஆகவே ஒற்றுமையாகச் செயற்படுங்கள். எங்கே ஒற்றுமை இருக்கின்றதோ, அங்கு இருதயம் தூய்மையானதாக இருக்கும். எங்கே தூய்மை இருக்கிறதோ அங்கு தெய்வீகம் இருக்கும். நீங்கள் தூய்மையான இருதயத்துடன் இருந்தால்.

இறைவன் நிச்சயமாக உங்களுடைய தேவையை நிறைவேற்றுவார். தூய் மையான இருதயத்தினால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.

**அரசியலை விலக்குங்கள்:**

நினைவில் வைத்திருங்கள் நீங்களே சாயி நிறுவனத்தின் எதிர் கால ஒளி காட்டிகள். தற்போது நிறுவனத்தில் உள்ள பெரியோர்கள் வயதாகி தளர்ந்து விடுவார்கள். இளைஞர்களே நீங்கள் இந் நிறுவனத்தை முன்னின்று நடத்தத்தயாராகுங்கள் ஒவ்வொரு பிராந்தியத்திலும் முக்கிய பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த இளைஞர் தலைவர் இருக்கவேண்டும் நீங்கள் அரசியலிலிருந்து விலத்தியிருப்பதை நிச்சயப்படுத்துங்கள். சமூகத்தினது நன்மைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் உழையுங்கள். இதுவே மகத்தான சாதனை.

**தெய்வீகத்தில் மூழ்குங்கள் — நான் வருவேன்.**

*Be always immersed in the divine, not in deep wine.* தெய்வீகத்தில் மூழ்கியிருப்பவர்கள் மட்டுமே எனது அன்பிற்குரியவர்கள். நீங்கள் சுவாமிக்குப் பிரியமானவராக இருக்க விரும்பினால் உங்களது நடத்தை செயல்கள் யாவும் தெய்வீகமாக இருக்கவேண்டும். அப்படியான ஒருவர் என்னைத்தேடி இங்கு வரத் தேவையில்லை. நீங்கள் எங்கிருந்தாலும் நான் அங்கு வருவேன். நான் அங்கு வருவேன், நான் அங்கு வருவேன் நீங்கள் எங்கிருந்தாலும் நான் அங்கு வருவேன். நான் எப்பொழுதும் உங்களுள் இருக்கிறேன். உங்களைச் சூழ இருக்கிறேன். நான் உங்களில் இருந்து வேறானவன் அல்ல நானும் நீயும் ஒன்று

தொகுப்பு: டாக்டர் சி சிவகோணேசன்
டாக்டர் சி. சிவகிதா
நல்லூர்

"இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடாத்துகிறார்கள். சமையல்காரர், சிகை அலங்கரிப்பவர், துணி கழுவுதல் செய்பவர், காவற்காரர், சாரதி என்றவாறு ஆட்கள் சேர்க்கப்பட்டாலும், அவர்கள் எல்லோரும் சில பொதுவான வேலையைச் செய்தல் வேண்டும். உடற் பயிற்சி செய்யவேண்டும், அணிநடைக்குச் செல்லவேண்டும், துவக்கோடு பரீட்சியம் இருத்தல்வேண்டும் இவை இல்லாவிடில் இராணுவத்திலே சேவை செய்யமுடியாது. அதுபோல நீங்களும், இரசாயனவியல், பௌதீகவியல், தாவரவியல், கணிதம், வரலாறு, போன்ற ஏதாவது ஒரு துறையில் மாணவராக இருக்கலாம். ஆனால் ஒவ்வொருவரும் தெய்வீக சாதனையில் தேர்ச்சியுடையவராக இருத்தல் வேண்டும். இந்தச் சான்றிதழ் இன்றி இந்த நிறுவனத்தின் உறுப்பினராக யாரும் இருக்க முடியாது."

- பாபா -

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பிரசாந்தியில் மாதர் தினம்

காலம்: **19 - 11 - 1999**

**இடம் : சாய் குல்வந்த் மண்டபம், பிரசாந்தி நிலையம்**

**ஒரு தெய்வலோகம்:**

அன்று அதிகாலை ஐந்துமணி, சாயி அன்பர்கள், ஆண், பெண் ஆகிய இருபாலரும் அவரவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் மண்டபத்தினுள்ளே அமைதியாக அமர்ந்திருக்கிறார்கள். உள்ளே அமர்ந்தவண்ணம் மணடபத்தைச் சுற்றி ஒரு கண்ணோட்டம் விட்டேன். பளபளப்பான மின் விளக்குகள் ஆங்காங்கே பொருத்தப்பட்டிருந்தன. மண்டபத்தின் நுழைவாயில்கள் எல்லாவற்றிலும் வாழை மரங்கள், உள்ளே பலவர்ண மலர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மலர்க் குடங்கள், ( *Flower pots* ) மற்றும் மலர்ச் செண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. இன்னும் பலவிதமான கண்ணைப் பறிக்கும் அலங்காரங்கள். சுருங்கச் சொன்னால் சாய் குல்வந்த் மண்டபம் தெய்வ லோகமாகக் காட்சிஅளித்தது என்றுதான் சொல்லவேண்டும். அன்பர்கள் கூட்டத்தினால் மண்டபம் நிரம்பி வழிந்தது வெளியேயும் நூற்றுக் கணக்கானோர் விழாவினைக் கண்டுகளிக்க ஆவலுடன் காத்திருந்தார்கள்.

**ஓம்காரம், வேதபாராயணம், நகர பஜனை:**

காலை மணி ஐந்து பதினைந்து. நிலைய மந்திர் உள்ளே கூடியிருந்த அன்பர்கள் ஓம்காரம் சொல்ல ஆரம்பித்தனர். வெளி மண்டபத்தில் இருந்த மற்றையோரும் தொடர்ந்து கூறி இருபத்தொரு தடவைகள் ஓம்காரம் ஒலித்தது. இதனையடுத்து பெண்களினால் சாயி சுப்ரபாதம் பாடப்பட்டதை ஒலி பெருக்கியில் கேட்டுமகிழ்ந்தோம் எங்கும் நிசப்தம் நிலவியது. அடுத்து வேதபாராயணம் ஓதப்பட்டது. இங்கு குறிப்பிடக் கூடிய ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால், சாதாரண நாட்களில் தினமும் ஆண்கள் தான் இதில் பங்கு பற்றுவார்கள் ஆனால் அன்று பகவானால் ஸ்தாபிக்கப்பட்ட அனந்தப்பூர் மகளிர் கல்லூரி மாணவிகள் பன்னிரண்டு பேர், வரிசையாக மண்டபத்தின் உள்ளேநின்று பாராயணம் தொடங்கி மண்டபத்தைச் சுற்றி வந்து வேத பாராயணத்தைப் பூர்த்தி செய்து கொண்டனர். ஐந்து முப்பது மணியளவில் நகர பஜனை ஆரம்பமாகியது. பிரசாந்தி நிலையத்தின்

நுழை வாயிலிலே வீற்றிருக்கும் விநாயகப் பெருமான் சந்நிதானத்தில் ஆண், பெண் ஆகிய இரு குழுவினரும் வெவ்வேறாகக் கூடி நின்று பஜனையை ஆரம்பித்து சாய் குல்வந் மண்டபத்தைச் சுற்றி வந்தார்கள்.

**மங்கள இசை மழை:**

காலை ஆறுமணி பிரபல நாதஸ்வர, தவில், வித்துவான்கள் தமது வாத்தியங்களில் மங்கள இசை மழை பொழிந்தார்கள். மக்கள் அமைதியாக இதனை ரசித்துக்கொண்டிருந்தார்கள்.

**பாண்டு வாத்திய இசை:**

சரியாக ஆறு முப்பது மணிக்கு மண்டபத்தின் வலதுபுற வாயிலின் பக்கமாகப் பாண்டு வாத்திய இசை ஒலித்தது. இதனை வாசித்தபடியே அநந்தப்பூர் கல்லூரி மாணவிகள் சிலர் கிரமப்படி உள்ளே வந்தனர். இவர்களைத் தொடர்ந்து ஈஸ்வரம்மா உயர்நிலைப் பள்ளி மாணவிகள் சிலர் பாண்டு வாத்திய இசையுடன் வந்தார்கள். அடுத்துப் பின்னால் பன்னிரண்டு இளம்மாணவிகள் அலங்காரமாக புடவை அணிந்து தீபம் ஏற்றி வந்தார்கள்.

**அன்புத் தெய்வம்:**

இவர்கள் யாவரும் உள்ளே வந்து ஆங்காங்கே நின்றதும் நடமாடும் தெய்வமாகிய எமது அன்புக்குரிய பகவான் பாபா மெதுவாக நடந்து மண்டபத்தின் உள்ளே வந்தார். மேடையில் சுவாமி ஏறியதும் மகளிர் குழுத் தலைவியின் வேண்டுகோளுக் கிணங்கி மங்கள விளக்கேற்றி வைபவ ரீதியாக விழாவினை ஆரம்பித்து வைத்தார். பக்தர்கள் கரகோஷம் வானைப் பிளந்தது, மேடையில் வைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் பகவான் சென்று அமர்ந்தார்.

**நிகழ்ச்சிகள்:**

மாதர்குழு செயலாளர் வரவேற்புரை நிகழ்த்தி, அன்றைய காலை நிகழ்ச்சி நிரலையும், அறிவித்தார். சாய் குல்வந் மண்டபத்தில் பகவான் அமர்ந்திருக்கும் மேடையின் எதிரில் கலை நிகழ்ச்சிகளுக்கென பிரத்தியேக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சிகளின் முதல் அம்சமாக சென்னையில் இருந்து வந்த இளம் நங்கையர் குழுவின் பரதநாட்டியம் இடம்பெற்றது. இது நடராஜப் பெருமானுக்கு சமர்ப்பணமாக அமைந்தது.

அடுத்து கர்நாடக சங்கீதம். பஞ்சவீணை இசை முறையே பெண் மணிகளால் நடாத்தப்பட்டது. அடுத்தபடியாக ஒரு ஏழுவயதுச் சிறுமி குறி சொல்லுதல். இக் குழந்தையை குறத்தி போன்று அலங்காரமாக உடுத்தி, இடுப்பில் ஒரு கூடையுடன் பகவான் இருக்கும் மேடையில் ஒரு பக்கமாக சிறியமேசை ஒன்றின்மேல் அமரச் செய்தார்கள். சரியாக இருபது நிமிடங்கள் இச்சிறுமி குறி சொல்லிக் கொண்டே போனாள், இது ஒலிபரப்பப்பட்டது. எல்லோரும் கைகொட்டி

மகிழ்ந்தார்கள். சிறுமியின் பேச்சு தெலுங்குப் பாஷை என்ற படியால் எம்முள் சிலருக்கு விபரம் புரிய வில்லை. பக்கத்தில் இருந்த அம் மொழி தெரிந்தவர்கள் சிலர் இடை யிடையே விளக்கம் சொன்னார்கள். இங்கு நாம் ஆச்சரியப்படவேண்டிய விடயம் என்னவென்றால், இக் குழந்தை குறி சொல்லிய இருபது நிமிடங்களும் கையில் ஒரு காகிதத் துண்டு கூட வைத்திருக்கவில்லை, மற்றும் பெரியவர்களின் உதவியும் பெறவில்லை. முன்கூட்டியே சொல் லிக் கொடுத்ததை மனதில் வைத்துக் கொண்டே அவ்வளவும் சொல்லி முடித்தது

கடைசியாக அக்குழந்தை கூறியது இதுதான் ''சுவாமி' இந்த ஆகிலம் முழுவதற்குமே தாங்கள் தான் வருங்கால அரசன்'' என்று சொன்னாள்.

**எம். எஸ்:**

மேலும் பிரபல கர்நாடக இசை மேதை பத்மபூஷணம் திருமதி எம். எஸ். சுப்புலஷ்மி அன்றைய விழா வினு கு வருகை தந்திருந்தார். முதிய வயது என்றாலும் பகவானின் அதி தீவிர பக்தை என்றமையினால் சென் னையில் இருந்து வந்திருந்தார். சுவாமி எழுந்து அவர் அண்மையில் சென்றதும் திருமதி ''எம் எஸ்'' எழுந்து நிற்க, பகவான் அவர் கரங் களைப் பற்றி ஆசீர்வாதம் செய்து பாத நமஸ்காரம் கொடுத்தார். அப் போது அவரது பிரபல்யமான பாடல் ''காற்றினிலே வரும் கீதம்'' ஒலி பெருக்கியில் இசைக்கப்பட்டது.

அடுத்தபடியாக சாயி பஜனை ஆரம்பமாகியது இதில் எல்லோருமே பெண்கள்தான் கலந்து கொண் டார்கள். பஜனை நடந்து கொண் டிருக்கும்போது, பகவான் மகளிர்குழு உறுப்பினர்களுக்கும், மற்றும் விழா வினுக்கு வருகை தந்திருந்த முக்கிய பெண் விருந்தினர்களுக்கும் புடவை வழங்கினார். பஜனை முடிவில் ஆரத் திப் பாட்டு ஆரம்பித்ததும், மூன்று பெண்கள் சுவாமிக்கு ஆரத்தி எடுத் தார்கள். இறுதியாக கூடியிருந்த அன் பர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது மேடைக்கு அண் மையில் இருந்தவர்களுக்கு பகவான் தன் கையினாலேயே பிரசாதம் வழங் கினார். சுமார் ஒன்பதரை மணி யளவில் காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

**மாலை நிகழ்ச்சிகள்:**

பக்தர்கள் அனைவரும் சாய்குல் வந்த் மண்டபத்தில் அமைதியாக அமர்ந்தனர். பகவான் சரியாக இரண்டு இருபதிற்கு மண்டபத்திற்கு வருகைதந்தார் சுவாமி மேடைக்குச் சென்று தனது ஆசனத்தில் அமர்ந்த வுடன், மக்கள் கரகோஷம் செய்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பாலர் பிரிவுப் பள்ளி மாணவிகள் சுவாமியின் இடது புறத்தில் நின்று வேதபாராயணம் செய்தார்கள்.

மாலை நிகழ்ச்சி நிரலில் முதலாவதாக மகளிர் குழு ஒன்று பகவானைப் புகழ்ந்து வாழ்த்தி ஆங்கிலம், லத்தீன் ஆகிய மொழிகளில் பாடல்கள் பாடினார்கள். இதில் மேலைத்தேய நாட்டுப் பெண்களும் கலந்து கொண்டனர்.

**பெண் பக்தர்களின் உரை:**

அடுத்தபடியாக மூன்று பெண்கள் முறையே பதினைந்து நிமிடங்கள் உரையாற்றினார்கள். பகவானுடன் தமது அனுபவங்களையும், தாம் செய்து கொள்ளும் சேவைகளைப் பற்றியும் கூறினார்கள். இவர்களுள் ஒருவர் இந்திய மத்திய அரசாங்கத்தில் அமைச்சர் பதவியில் இருப்பவர் என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

**தெய்வீக உரை:**

கடைசியாக நாமெல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நமது அன்புக்குரிய பகவானின் தெய்வீக உரை ஆரம்பமாகியது. சுவாமி தெலுங்கில் தமது உரையை நிகழ்த்தவே, அவருடைய ஒவ்வொரு வசனமும் உடனுக்குடன் ஒரு பெண் மணியினால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது நான்கு மணிக்கு ஆரம்பித்து, சரியாக ஐந்து முப்பது மணிக்கு சுவாமி தனது உரையை நிறைவேற்றிக்கொண்டார். (இதனை சாயி அன்பர்கள் "சனாதன சாரதி" தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு வெளியீடுகளிலுமிருந்து தெரிந்து கொள்ளலாம்) தொடர்ந்து ஆரத்தி பஜனைப் பாடல் பாடப்பட்டது. மூன்று பெண்கள் சுவாமிக்கு ஆரத்தி எடுத்தனர். இத்துடன் விழா இனிதே நிறைவெய்தியது. மேடையில் நின்றபடியே பகவான் தனது இரு கரங்களையும் உயர்த்தி பக்தர் கூட்டத்தை ஆசீர்வதித்தார். அன்பர்கள் அனைவரும் எல்லையில்லா மகிழ்ச்சியில் கை கொட்டி சுவாமியின் ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொண்டனர்.

முடிவாக பகவான் பாபா மெதுவாக நடந்து சாய் குல்வந்த் மண்டபத்தை விட்டுத் தனது இருப்பிடம் சென்றார். இத்துடன் மாலை ஆறு மணியளவில் அன்றைய மாதர் தின விழா பூர்த்தி பெற்றது

ஜெய்சாயிராம்

திருமதி சிந்தா வன்னியசேகரம்
கொழும்பு

ஓம் சாயிராம்

# சாயி இளைஞர் சேவையில் இணைந்து கடமையைச் செய்ய வாருங்கள்!

இளைஞர்களுக்கான எனது உரையை பகவானின் பாத கமலங்களை வணங்கி ஆரம்பிக்கின்றேன்.

நான் புட்டபர்த்தி சென்று இருந்தபோது சுவாமி நான்கு உரைகள் ஆற்றினார். அவற்றில் சில விஷயங்களை இங்கு சொல்லலாம் என நினைக்கின்றேன்.

சுவாமி கூறுகிறார்:

மனிதனுக்குள் தெய்வீகம் இயல்பாகவே உள்ளது. ஆனால், அவன் அதை மறந்து இறைவனும் தானும் வேறுவேறு என நினைத்து பலவிதமான வழிபாடுகளையும், பூஜைகளையும் செய்கின்றான் மக்கள் ராமா, கிருஷ்ணா, யேசு, அல்லா என பல விதமான நாம ரூபங்களில் வணங்கினாலும் அவற்றின் அடிப்படை சக்தியாக மிளிருவது சிவசக்தி ஸ்வரூபமே ஆகும். இவ் உலகத்தின் அடிப்படை சக்தியாக விளங்கும் இச் சக்திக்கு பகவான் கொடுத்த நாமம் ''பவானி சங்கரர்''.

பவானி என்றால் — ஊக்கம் / சுயமுயற்சி சங்கரா என்றால் — முழுநம்பிக்கை

இவ் உலகம் இந்த இரண்டின் அடிப்படையில் தான் இயங்குகின்றது. இவை இரண்டும் பிரிக்க முடியாது. ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. எங்கும் பரந்துள்ளது.

இந்த இரண்டும் இல்லாது வாழ்க்கையில எதையும் அடையமுடியாது. இதில ஒனறு குறைவுபட்டாலும் ஒரு போதும எந்த காரியத்திலும் வெற்றி பெறமுடியாது. ஆகவே மனிதனுக்குள் இருக்கும் தெய்வீகத்தை உணர முழுநம்பிக்கை அவசியம்.

எப்படி ஒரு மரம் பெரிதாகவும், உறுதியாகவும் வளர அதனுடைய வேர் ஆழமாக போகின்றதோ. அது போல் திடமான நம்பிக்கை, முயற்சி இருத்தால் எமக்குள் இருக்கும் தெய்வீகசக்தி கூடிக்கொண்டு போகும் என சுவாமி கூறினார்.

மக்கள் ''லோக சமஸ்தா சுகினோ பவந்து'' என்று கூறுகிறார்கள். வெறும் வார்த்தைகளாக இம் மந்திரத்தை சொல்வதைவிட்டு விடா முயற்சியுடனும், நம்பிக்கையுடனும் கூறினால்தான் இதன் முழுப் பலனும் கிடைக்கும். அதாவது

அகிலம் எங்கும் அமைதி நிச்சயம் கிடைக்கவேண்டும் என்றால் மனதில் நம்பிக்கை இருக்கவேண்டும்.

எனவே 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இளைஞர்களாகிய நாம் காலடி எடுத்து வைத்திருக்கின்றோம். சுவாமி கூறியபடி முயற்சி, திட நம்பிக்கையுடன் அவர் சொல்கின்ற காரியங்களுக்காக எமது நேரத்தை ஒதுக்கி அவற்றை தொடங்குவோம். என திடசங்கல்பம் பூணுவோம்.

முக்கியமாக பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளை சுவாமி சொல்கின்ற ஆத்மீக சாதனை, சேவை மூதலியவற்றில் ஈடுபட வைக்க வேண்டும். அவர்களை ஆர்வ மூட்ட வேண்டும்.

சுவாமி இப்பொழுது அடிக்கடி சொல்லுவார் '' நீங்கள் தியானம் பண்ணுவதைவிட சேவை செய்வதே எனக்கு மிகப்பிரியமான காரியம் '' கிழமையில் 6மணி நேரமாவது ஒதுக்க வேண்டும் சேவைக்காக என சுவாமி கூறுகின்றார்.

முக்கியமாக இன்றைய இளைஞர்கள் நேரமில்லை என கூறுவார்கள் தனிப்பட்ட வகுப்புகளினாலும், தொலைக்காட்சி பார்ப்பதினாலும் இவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. எம் சாயி இளைஞர்கள் தங்கள் உயர் தர வகுப்பு படிப்போடும், பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டும் சேவைக்காக தமது மிகுதி நேரத்தை ஒதுக்கி வருகிறார்கள். ஏன் மற்ற இளைஞர்களால் முடியாது? நிச்சய மாக நேரம் ஒதுக்கமுடியும். '' மன முண்டானால் இடமுண்டு ''

இன்று எம் இளைஞர்கள் தொலைக்காட்சி பார்ப்பதற்கு அடி மையாகிவிட்டார்கள். இதன்விளைவு பாரதூரமாக இருக்கின்றது. 2 வது இளைஞர் மாநாட்டில்கூட தொலைக் காட்சி பார்த்ததனால் ஏற்பட்ட விளைவுகளை சுட்டிக்காட்டினார்கள். அதில் அமெரிக்காவில் 3 சிறுவர்கள் தங்கள் வகுப்பு மாணவர்களையும், ஆசிரியர்களையும் சுட்டுக் கொன்றது, எல்லோர்க்கும் தெரிந்த விடயம். இவர்கள் ஏன் இப்படி செய்தார்கள்என ஆராய்ந்தால் 3 சிறுவர்களும் தங்கள் 12 வயதுக்கிடையில் கிட்டத்தட்ட 1000 கொலைகளை பார்த்துவிட் டார்கள் தொலைக்காட்சி மூலமாக.

இது அவர்களின் ஆழ் மனதில் பதிந்து விகாரத்தை ஏற்படுத்தியுள்ள தாக கூறியுள்ளனர். மற்றும்படி சிறுவர்களுக்கு தனிப்பட்ட முறையில் கோபமோ, விரோதமோ இருக்க வில்லை.

இப்படியான நிகழ்வுகள் எம் சமூ கத்திலும் நிகழாது என்பது என்ன நிச்சயம்? இப்படியான நிகழ்வினால் சமூகத்தில் எவ்வளவு பாரதூரமான விளைவு ஏற்பட்டிருக்கிறது?

இன்றைய உலகம் இளைஞர் கை களிலே உள்ளது. எனவே இப்படியான

மனவிகாரங்களைத் தடுக்க இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டும். சாயி இளைஞர்களாகிய நாம் இதற்கு மற்ற இளைஞர்களையும் சேர்த்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் "இளைஞர்கள் படித்து பட்டம் பெற்றுவிட்டால் போதாது. அந்தப் படிப்பினால் சமூகத்திற்கு பயன்படும் வகையில் சேவையாற்ற வேண்டும். இல்லையெனில் அந்தப் படிப்பினால் எவ்வித பிரயோசனமும் இல்லை" என சுவாமி கூறியுள்ளார்.

ஒரே நாளில் இளைஞர்களின் மனதை திருப்பிவிட முடியாது. படிப்படியாகத்தான் இளைஞர்களை நாம் ஆன்மீக பாதைக்கு இட்டு செல்ல முடியும் எனவே அவர்களை முதலில் பஜனைக்கு வரச்சொல்லல். பின் சேவைக்கு அழைத்து செல்லல். பின் சோஹம் (மூச்சுப்பயிற்சி) காயத்திரி ஜெபம் போன்றவை சொல்லிக் கொடுக்கப்படல் வேண்டும். அத்தோடு சுவாமி கூறும் நேரான சிந்தனையை ( *Possitive thinking* ) இளைஞர்கள் தங்கள் மனதில் வளர்க்க வேண்டும். உதாரணமாக, ஒரு வேலையை தொடங்கினால் அதை சரியாக செய்வேன், அக்காரியத்தை செய்து முடிப்பேன் என மனதில் எண்ணவேண்டும். இதை செய்வேனா? கஷ்டமாக இருக்கிறதே என ஒருபோதும் நினைக்கக்கூடாது.

ஆகவே 1000 வருடத்திற்கு ஒரு முறை இறைவன் மனித உருவில் வருகிறார் என கூறப்படுகிறது கலியுக அவதாரமான சாயி பகவானை நாம் அறிந்து தெரிந்து வைத்திருப்பதும். அவர் வாழும் காலத்தில் நாமும் வாழ்வதும் பெரும் பாக்கியம். அது மட்டுமல்ல அவருடைய போதனைகளின்படி வாழ்வது ஆன்மீகப் பாதையில் முன்னேறி செல்ல உதவும்.

இளைஞர்கள் ஆகிய நாம் பகவான் வற்புறுத்தி கூறும் சேவையை செய்யவேண்டும். இளைஞர் மாநாட்டில் கூட சுவாமி கூறினார்: நீங்கள் கிராமத்திற்கு சென்று ஏழைகளுக்கு உதவக்கூடும். கிராம அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளக்கூடும். ஆனால் இவற்றினால் நீங்கள் பெரிய சேவை செய்பவர்கள் என்று அர்த்தம் அல்ல. இதன்மூலம் உங்கள் கடமையே செய்கிறீர்கள். ஆகவே உங்கள் வாழ்க்கையை சேவையிலேயே செலவிடுங்கள்

இளைஞர்களே, சற்று சிந்தியுங்கள். நாம் எப்போது கடமை செய்ய தொடங்கப் போகிறோம்? கடமையே சரிவர செய்யவில்லை, சேவைக்குப் போகமுடியுமா?

இளைஞர்களே, முயற்சியும், திட நம்பிக்கையும் மனதில் வளருங்கள். மற்றவர்களுக்காக சேவை செய்ய வேண்டியதில்லை உங்கள் ஆத்மீக முன்னேற்றத்திற்காக செய்யுங்கள்.

எனவே மனதில் சுவாமியை வணங்கி நம்பிக்கையுடனும், ஆர்வத்

துடனும் உங்கள் கடமையை செய்ய சாயி இளைஞர் அணியில் இணையுங்கள். சுவாமிக்கு செய்யும் சேவைக்கு நேரம் ஒதுக்கினால் மற்றகாரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடக்கும். சுவாமியே கூறுகின்றார் '' நீங்கள் சேவையை செய்துவிட்டு சுவாமி எனக்கு அதுதாருங்கள் இதுதாருங்கள் என கேட்கத் தேவையில்லை. சுவாமிக்கு தெரியும் உங்களுக்கு என்ன தர வேண்டும் என்பதும் நீங்கள் கேட்காமலே உங்களுக்கு தேவையானதை சுவாமி தருவேன். '' என்கிறார். மேலும் சுவாமி கூறுகின்றார்: உங்களின் முன், பின்னாக, பக்கமாக உங்களைச் சுற்றியும் சுவாமி இருக்கின்றேன் உங்களுக்குள்ளேயேயும் நான் இருக்கிறேன். நீங்களும் நானும் ஒன்று.

நான் சாயி இளைஞர் அணியில் இருந்தபடியால் தான் பகவானை தரிசிக்கும் பெரும்பேறு கிடைத்தது. எனவே இப்படியான நல்ல சந்தர்ப்பங்கள் இனிமேலும் நடக்கவிருக்கின்றன.

அதில் பங்குபெற சாயி இளைஞர்கள் தங்களை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே நீங்கள் சாயி இளைஞர் சேவையில் இணைந்து கடமையைச் செய்யவாருங்கள்.

டாக்டர் செல்வி சிவஞானம் சிவகீதா
நல்லூர்

(நல்லூர் சாயி பஜனை நிலையத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்.)

# மருத்துவம்

## பகவான் சாயி உடன் சுகம் பற்றிய உரையாடல்

**காலம்:** பெப்ரவரி **18, 1999** காலை **7-00 — 8-30**

**சுவாமி:** (N. R ஐ பார்த்து) நீரிழிவு நோய்க்கு என்ன சிகிச்சை?

**N R:** முதலாவது உணவுக்கட்டுப்பாடு, பின்பு குளிகைகள், கடைசியாக இன்சுலின், சுவாமி.

**சுவாமி:** இன்சுலின் நல்லதல்ல. அது மிகவிரைவாக இரத்தத்தின் சீனியை குறைக்கும். நோயாளிக்கு வியர்க்கும். குருதி அமுக்கம் (பிளட் பிரஷர்) குறையும். மயக்க நிலை (கோமா) வரக்கூடும். இன்சுலினைத் தவிர்ப்பது நல்லது. பில்ஸ் ஓ. கே.

**சுவாமி:** நீரிழிவு வருவதற்கு காரணம் என்ன?

N R: கணையம் என்ற சுரப்பி தான் பிரச்சினை, சுவாமி.

சுவாமி: கணையம் அல்ல உண்மையான பிரச்சினை. முக்கியமாக தவறான உணவும், தேகப்பயிற்சி இல்லாமையும்தான் பிரச்சனை. தென்னிந்தியர் அதிகசோறு உண கிறார்கள். வட இந்தியர் அதிககோதுமை (சப்பாத்தி) சோறும, கோதுமையும உணவருந்தி அரைமணி நேரத்திலேயே, குருதிச சீனியை அதிகரிக்கின்றன. தென்னிந்தியர் சோற்றையும், வட இந்தியர் கோதுமையும் குறைக்கவேண்டும். தென்னிந்தியர் கோதுமையை விரும்புவதில்லை. அவர்கள் சப்பாத்தி உண்ண வேண்டும். அப்போது அதிக சோற்றை உண்ண மாட்டார்கள். வட இந்தியர் சோறு உண்ணவேண்டும். அவர்களுக்கு சோற்றில் விருப்பம் குறைவு. ஆகவே அதிகம் சோறு உண்ண மாட்டார்கள்.

மேலும் கேழ்வரகு போன்ற தானியங்களை உண்டால் குருதிச் சீனி 2–3 மணி நேரம் எடுத்து மெல்லமாக அதிகரிக்கும். அது சுகத்துககு நல்லது. மெல்லமாக சீனி ஏறுவதை உடல் சமாளிக்கும். கேழ்வரகு போன்ற தானியங்களை உண்பவர்களுக்கு நீரிழிவு பிரச்சனை அல்ல.

நாக்கு ஆணையிட்டபடி, மக்கள் உண்ணப்படாது. நாககிலே 48,000 சுவை அரும்புகள் உண்டு. தவறாக உபயோகித்தால், சீனியையே மிகவும விரும்பி நீரிழிவு வரலாம. நல்ல சுகத்திறகு புலன்களைக் கட்டுப் படுத்தவேண்டும். அதேபோலும், கண்கள் கூடச சரியான முறையில பாவித்தால்தான் நல்ல உடலும், மனமும் வளரும். சூரியஒளி கண்களின் திரையிலுள்ள பலவிதமான கலங்களுக்கு வெளிச்சம் தருகிறது. கண்கள் நல்லவற்றைப் பார்ப்பதற்குக் கட்டுப் படுத்தவேண்டும். அல்லாவிடில் அவை கெட்டவற்றைப் பாாப்பதற்கு ஆவல் கொண்டு, சுகம் கெடும். ஆகவே, நல்ல சுகத்திறகுப் புலன்களைக் கட்டுப்படுத்த வேண்டும். நீரிழிவுக்கு சில பரம்பரைக் காரணமும் உண்டு.

N R: ஆம் சுவாமி, சமீபகால ஆய்வுகள் இவற்றை உறுதிப் படுத்துகின்றன.

**சுவாமி:** உன்னுடைய தாயார் எப்படி?

**N R:** அவவினுடைய நீரிழிவு திருந்திவிட்டது. ஆனால் மூட்டுவியாதி ( *Arthritis* ) உண்டு.

**சுவாமி:** குருதியில் சீனி எவ்வளவு?

**N R:** அதை அவ தானாகவே பார்ப்பா, சுவாமி.

**சுவாமி:** நீ ஒரு டாக்டர். உன்னுடைய தாயாரின் சீனியையே நீ பார்ப்பதில்லை. இந்தக் கால டாக்டர்கள், நீரிழிவுக்கு சரியாக சிகிச்சை அளிப்பதில்லை. உணவுக் கட்டுப்பாடுதான் மிகவும் நல்லது. நீரிழிவுக்கு பச்சைநிற இலை, காய்கறிகள் நல்லது. ஆனால், கோலிஃபிளவர் நல்லதல்ல. கோவா நல்லது. கறுப்பு விதைகள் கொண்ட பழங்கள், உதாரணமாக அப்பிள், பேரிக்காய் (*Pear*), முந்திரி, முலாம்பழம் (*whter Melon*) ஆகியன நல்லவை. கஸ்றார்ட் அப்பிள், அதிக சீனி இருப்பதால் நல்லதல்ல. பப்பாசி நல்லது. கிழங்குகள், முக்கியமாக உருளைக் கிழங்கு தவிர்க்கப்பட வேண்டும்.

**சுவாமி:** (காடியாவின் மகனைப் பார்த்து) நீ என்ன செய்கிறாய்?

**காடியாவின் மகன்:** நீரிழிவு நோய்க்குப் புதிய மருந்துகளைக்காண ஆய்வு செய்கிறேன்.

**சுவாமி:** மிக நல்லமுறை உணவுக் கட்டுப்பாடும், தேகாப்பியாசமும் தான்.

**சுவாமி:** (டாக்டர் ரவியைப் பார்த்து) இதய நோய்க்கு என்ன காரணம்?

**ரவி:** அதிகமான கொலஸ்றரோலும், அதிக இரத்த அமுக்கமும்.

**சுவாமி:** இல்லை. காரணம் *Hurry, Worry, Curry*. (அவசரம், கவலை, கறி). அதிகமான அவசரம், கவலை தந்து, மனத்தாக்கம் உண்டாக்குகிறது. இது இதயத்திற்கு நல்லதல்ல! சுவாமியைப் பார், அவர் சுகத்திற்கு பிரச்சினை இல்லை. கறியிலே அதிக எண்ணையைத் தவிர்க்கவும். தினமும் உள்ளி உண்டால் அது கொலஸ்றரோலைக் குறைக்கும். உரித்த வாதாம் பருப்பையும் (*Almonds*) கொலஸ்றரோலைக் குறைக்கும். இரவில் அவற்றை நீரில் ஊறவைத்து, காலையில் தோலை உரித்து, உண்ணவும்.

**வேங்கட்:** உள்ளி ராஜச உணவு இல்லையா, சுவாமி? ஆத்மிகத்திற்கு அது தீங்கில்லையா?

**சுவாமி:** முதலில் உடல் சுகமாக இருக்கவேண்டும். அதன் பின்புதான் குணங்கள் (*Gunas*). ஆரோக்கியமான உடல் இல்லாவிடில், ஒருவர் ஆத்மிக பாதையில் போக முடியாது.

**ஒரு பக்தர்:** இரத்த அமுக்கத்தை கட்டுப்படுத்துவது எப்படி, சுவாமி?

**சுவாமி:** உப்பைக் குறைக்கவும். குறைந்த உப்பு, குறைந்த பிளட் பிரஷர். அதிக உப்பு, அதிக பிளட் பிரஷர். உமது *BP* ஏற்கனவே குறைவாகவே இருந்தால், அதைத் திருத்துவதற்கு சிறிது உப்பு உணவில் சேர்க்கலாம்

**வேங்கட்:** தற்காலத்தில், ''நீடித்த களைப்பு'' (*Chronic Fatigue Syndrome*) என்று ஒரு புதிய நோய் கூறப்படுகிறது நோயாளிகள் தங்களுக்கு எந்த வேலையைச் செய்யவும் சக்தி இல்லை என்று சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம், சுவாமி?

**சுவாமி:** 'சக்தி இல்லை' என்ற ஒரு நோய் இல்லை. குறைவான சக்தி உண்டு. சக்தியே இல்லாது வாழமுடியாது.

**வேங்கட்:** அதற்கு காரணம் பக்றீரியா அல்லது வைரஸாக இருக்குமா?

**சுவாமி:** அவை காரணம் அல்ல. அது குறைந்த சக்திதான். ஏனெனில் மக்கள் கெட்ட, அசுத்தமாக்கப்பட்ட சிந்தனைகளாலும், புலன்களைத் தவறான முறையிலும், கண்டபடியும் பாவிப்பதாலும், தமது சக்தியை இழக்கின்றனர். ஆகவே சக்தி வழிந்தோடி, நீடித்த களைப்பு அடைகிறார்கள். அவர்கள் கெட்ட எண்ணங்களை அகற்றி, நல்ல எண்ணங்கள், தெய்விகம் நோக்கிய புலன்கள் ஆகியவற்றால் நிரப்ப வேண்டும். அப்போது நல்லவற்றை எண்ணுதல், நல்லவற்றைப் பார்த்தல், கேட்டல், செய்தல் என்று 'வாழ்ந்தால்' போற சக்தி திரும்பும். சுகம் அடையலாம்

ஸ்ரீலங்காவின் பகவான் ஸ்ரீ சத்திய சாயி மத்திய அறக்கட்டளை நிதியத்தின் குறிக்கோள்கள், செயற்பாடுகள் அடுத்த சாயி மார்க்க இதழில் வெளிவரும் இடம் போதாமையால் இந்த இதழில் பிரசுரிக்க முடியவில்லை. — ஆசிரியர் —

## இப்படியும் நடக்கிறது

✲ சாயிமார்க்கம் கடந்த இதழில் அரியாலை ஆனந்தன் வடலி வீதியில் சாயி சிறுவர் இல்லத் திறப்புவிழா சம்பந்தமாக ஒரு செய்தி வெளியிட்டோம். அதனை வாசித்த மொறட்டுவவைச் சேர்ந்த ஒரு சாயி அன்பர் உடனடியாக ரூபா இருபத்தையாயிரம் (25,000/-) அனுப்பி வைத்துள்ளார்.

✲ கடந்த இதழில் நல்லூர் நிலைய சாயி அடியார் 10 சந்தாவைச் சேர்த்து அனுப்பியதைக் குறிப்பிட்டிருந்தோம். அவர்கள் மேலும் 36 சந்தாக்கள் சேர்த்து அனுப்பியுள்ளனர்.

# செய்திகள்

**கிழக்குப்பிராந்திய சேவாதளப் பயிற்சி முகாம்கள்:**

ஆரையம்பதியில் — 73 தொண்டர்கள் பயிற்சி பெற்றனர்.

அக்கரைப்பற்றில் — 66 தொண்டர்களும்,

கல்முனையில் — 35 தொண்டர்களும் பயிற்சி பெற்றனர்.

இப் பயிற்சி முகாம்கள் ஒவ்வொன்றும் 2 நாட்கள் நடைபெற்றன என கிழக்கு பிராந்திய இணைப்புக் குழுத் தலைவர் *Dr. R.* சிவஅன்பு அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**பருத்தித்துறை "சாயி மந்திரில்" பகவானின் பிறந்ததின விழா:**

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த எல்லா சாயி நிலையங்களும் இணைந்து சாயி மந்திரில் பகவானின் பிறந்ததினத்தைச் சிறப்பாகக் கொண்டாடினர் மங்களவார்த்தியத்துடன் ஆரம்பமாகிய இந் நிகழ்ச்சியை இணைப்புக்குழு சார்பில் திரு. *N.* கந்தசாமி அவர்கள் கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார். பஜனையைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெற்றது. பகவான் பற்றிய வீடியோ படக்காட்சி இடம்பெற்று பகல் நாராயண சேவையும் இடம்பெற்றது. பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

# இளைஞர் மகாநாடு

( இந்துலால் ஷா அவர்களின் நிறைவுரையிலிருந்து ஒரு பகுதி )

"பகவான் எங்களுடன் உள்ளார். அடுத்த 25 ஆண்டுகளுக்கும். சாயி நிறுவனம் 25 ஆண்டுகள் மட்டுமா நிலைத்திருக்க விரும்பு கிறீர்கள்? அது பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் அமைப்பு 100 ஆண்டுகள் நிலைத்திருக்கவேண்டுமானால் என்ன செயற்பாடுகளைக் கொண்டு அதை ஸ்திரப்படுத்துவீர்கள்? மனித உருவம் அல்லது அருவ நிலையில் இதனைத் தொடர்வதற்கான செயற்பாடுகள் எவை? அருவ நிலையுடன் என்ன செயற்பாடுகள் தொடர்ந்து இருக்கப் போகின்றன? அதனால்தான் நாங்கள் இந்த விடயத்தை இப்போது முன்வைத்துள்ளோம். மனித உருவத்திற்கும், அருவத்திற்கும், இடையே வேறுபடுத்தி எப்படி நீங்கள் அருவத்தைப் புரிந்துகொள்ளப் போகிறீர்கள்? நீங்கள் அதனைப் பிரதிபலிக்கவேண்டும். நீங்கள் ஏதாவதொன்றை ஆரம்பித்தால், உங்கள் அடுத்த உத்தியோகத்தர் பாலவிகாஷ் பிள்ளைகளுடன் கருமமாற்றுவார்கள். 21ம் நூற்றாண்டு சாயி நிறுவனங்களைப் பொறுப்பேற்று நடத்தப்போகும் பாலவிகாஷ் பிள்ளைகள்மீது நாம் அதிக அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக் கிறோம். இதனால் உருவத்திற்கும், அருவத்திற்கும் உள்ள முரண் பாடு எங்களுக்கு ஏற்படாது. நீங்களும், நாங்களும் கண்டு அனுப வித்த பாபாவின் அற்புதங்கள் சாதாரண அற்புதங்கள் அல்ல. அவை இனிமேல் இருக்கமாட்டா. அப்படியெனில் அவை எப்படி விசுவாசத்தை உருவாக்கமுடியும்? சிறுவர்களில், உருவமில்லாத அருவ மாகிய இறைவன் மீது விசுவாசத்தை அவர்களுடைய ஞாபக சக்தி யூடாக வளர்ப்பதற்கு பாலவிகாஷ் மையங்களை அபிவிருத்தி செய்வது உங்கள் கடமையாகும். இதனை அவர்களுடைய கல்விசார், தொழில் ரீதி, நேரடி தியான நுட்பம், நல்இலக்கிய வாசிப்பு, பஜனை ஏனைய செயற்பாடுகள் ஊடாக வளர்த்தெடுக்கலாம்.

எனவே இதிலிருந்து ஒதுக்கிவிடாதீர்கள். நீங்கள் மனிதமேம்பாட்டு கல்வி கருத்தரங்கு வகுப்புகளுக்குச் சென்று மாணவனாக இருக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் அடுத்த பரம்பரைக்கு இதனால் என்ன அனுகூலம் உள்ளதென்பதைப் புரிந்துகொள்வீர்கள்."

**இப்பக்க அன்பளிப்பு:**

சாயி இளைஞர்கள்

நல்லூர் பஜனை நிலையம்.

# பிறந்தநாள் இன்றென்று வாழ்த்துகிறோம்

பிறவிப் பிணி நீக்க வந்த பரந்தாமா
பிரசாந்தி நிலைத்து சாயிராமா
பிறந்த நாள் இன்றென்று வாழ்த்துகின்றோம்
அருளியெம்மைக் காத்திடுவாய் சாயிராமா.

அறியாமைக் கடலிலே மூழ்கிக் கிடந்தோம்
தெரியாமல் பல பாவம் செய்து நலிந்தோம்
புரியாத பாதை வழி சென்று விழித்தோம்
சரியான பாதையிலே செலுத்தி வைத்தாய்.

ஒரு அடி உன்னை நோக்கி எடுத்து வைத்தால்
நூறு அடி பாய்ந்து வந்து அரவணைத்தாய்
சீறும் சினம் ஆத்மாவை எரிக்குமென்று
செறிவான சேவைப் பணி காட்டி வைத்தாய்.

அன்பாலே நாளைத் தினம் தொடக்கி வைத்து
அன்புடன் எந்தநாளும் நிரவிக் கொண்டால்
அன்பினிலே அந்நாளும் நிறைந்து விடும்
எந் நாளும் இறைபாதை சாயிபாபா.

சாயி நாமம் நாள் தோறும் ஓதிவந்தால்
சலிக்காது மனமன்றோ கீதை நாதா
பாசமாம கட்டறுக்கும் பரம வேதம்
பூசைக்கு நிகராகும் சாயி நாமம்.

டாக்டர் M. K. முருகானந்தன்

**அமரர் வேலணை கதிரேசு சண்முகம்**
**ஆவர்களின்**
**30 வது ஆண்டு சிரார்த்த தினம்**
**நினைவாக மகன்**
**ஸ்ரீ சண்முகம் பாலசுந்தரம் ஆவர்களின்**
**அன்பளிப்பு**